என்ற திருவள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாகவும், "ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தால் பல தாயின் வயிற்றில் பிறந்தோம்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் சொல்லுக்கேற்ப ஒரு கோடி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும். உலகெங்கும் வாழும் தமிழ்ப்பெருமக்களுக்கும் தாயாக விளங்கி, கடந்த 5 ஆண்டு காலம் முந்தைய ஆட்சியில் கொடுத்து வந்த மலை போன்ற எதிர்ப்புகளை தகர்த்தெறிந்து, மலைகளில் உயர்ந்த மலையாம் இமய மலையைப்போல் உயர்ந்து நின்று 3-வது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், நெருப்பாற்றையும் நீர்வீழ்ச்சி ஆக்குகின்ற ஆற்றல், அனலையும் தென்றல் ஆக்கும் சக்தி, சதிகளையும் முறியடிக்கும் வியூகம், சூழ்ச்சிகளை வீழ்த்திடும் மதிநுட்பம், தடைகளை உடைத்தெறியும் வீரம், துரோகத்தை வீழ்த்தும் விவேகம், இவை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சாதாரண, எளியவனான என்னை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மன்றத்தின் உறுப்பினராக்கி அழகு பார்க்கும் எங்கள் தாய், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்....

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10-35

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) 9-4-2002 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பு நூலகத்தில் இல்லாதது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். திரு. பொன்முடி அவர்கள் காலையில் பேசும்போது, அவைக் குறிப்புகள் நூலகத்தில் காணவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். உரிமை மீறல் தொடர்பாக அதை ஆய்வதற்காக இந்த அலுவலகத்திலிருந்தே அதை எடுத்திருக்கிறார்கள்.. அது அப்படியே வைக்கப்பட்டுவிட்டது.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சந்தேகம் எல்லாம், உறுப்பினர்கள் சென்று கேட்பது அதன் நகலுக்காக இருக்கலாம். அதை எங்களுக்குக் காட்டியிருக்கலாம். அந்த நகலை எடுத்துக்கொண்டு வந்துதான் பேசமுடியும். அதைக்

காட்டியிருக்கலாம் அல்லவா? நேற்றைக்கும் இல்லை என்று சொல்லி விட்டார்கள். இன்றைக்குப் போய்க் கேட்டபோதும் இன்றைக்கும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்போது நூலகத்தில் போய்ப் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) உங்களை மதித்து விளக்கம் சொல்வதற்காகச் சொன்னேன். (குறுக்கீடு) தானமாகக் கொடுத்த மாட்டை, பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கக்கூடாது. உட்காருங்கள்.

4. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 4 - ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. இராஜசேகர்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களித்து இந்த அவைக்கு என்னை அனுப்பிவைத்த இராஜபாளையம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியை இந்த அவையில் சமர்ப்பித்து, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியினர் தந்த தொல்லைகளால், சோதனைகளால் மாண்புமிகு அம்மா அவர்கள் பட்ட துயரம் ஏராளம். அமைதியாகத் தூங்கி இருக்கமுடியாது. அவர்களின் அதிகார வெறிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அடங்கிப் போயிருந்தால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அனாதை ஆசிரமம் தேடிப் போயிருக்கும். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள், நான் அஞ்சவும் மாட்டேன், அடைக்கலம் தா என்று எவரையும் கெஞ்சவும் மாட்டேன் என்று நெஞ்சுரத்தோடு, 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும், அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே' என்ற கவிதை வரிகளுக்கு இலக்கணமாக நிமிர்ந்து நின்ற பேராண்மை, உலகத்தில் வரலாறு படைத்த எந்த மாவீரனுக்கும் இல்லாத பெருமை, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, உங்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்குகளிலேயிருந்து மீளவே முடியாது, தண்டனையிலிருந்து தப்பவே முடியாது, தேர்தலிலே நிற்கவே முடியாது, மீண்டும் முதலமைச்சராய்